


### வடலூரில் ஈட்டி எறிதல் பயிற்சியின் போது உயிரிழந்த

# மாணவன் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக.1-

கடலூர் மாவட்டம், வடலூரிலுள்ள தனியார் பள்ளியில் நடைபெற்ற ஈட்டியெறிதல் பயிற்சியின் போது உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், பார்வதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த செல்வன். கிஷோர் (வயது 15) த/பெ. திருமுருகன் என்பவர் வடலூரிலுள்ள தனியார் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த நிலையில் 24.07.2024 அன்று பள்ளி மைதானத்தில் நடைபெற்ற ஈட்டியெறிதல் பயிற்சியின்போது எதிர்பாராதவிதமாக சிறுவன் கிஷோரின் தலையில் ஈட்டி பாய்ந்ததால் பலத்த காயமடைந்த நிலையில் புதுச்சேரி மற்றும் சென்னையிலுள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை மேற்கொண்டு, பின்னர் 30.07.2024 அன்று முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இச்சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டியில்

# ரூ.300 கோடி மதிப்பிலான திருக்கோயில் நிலங்கள் மீட்பு!

சென்னை, ஆக.1-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின்பகட்டுப்பாட்டிலுள்ளதிருக்கோயில்களுக்குச்h சொந்தமானhசொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டி, அருள்மிகு கரியமாணிக்கப் பெருமாள் திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.300 கோடி மதிப்பிலான நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டியில், அமைந்துள்ள கரியமாணிக்கப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் மேற்படி கிராமத்தில் சர்வே எண் 283/1ல் 5.36 ஏக்கர் மற்றும் சர்வே எண் 457/1ல் 0.94 ஏக்கர் ஆக மொத்தம் 16.30 ஏக்கர் நிலங்கள் 11 தனிநபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் கோவை மண்டல இணை ஆணையர் பொ.ரமேஷ் அவர்களின் நீதிமன்ற உத்தரவின்படி, சட்டப்பிரிவு 78ன் கீழ் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, கோவை உதவி ஆணையர் (கூ.பொ.) திருமதி இரா.மேனகா தலைமையில் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்கள் முன்னிலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, அந்நிலங்கள் முழுவதுமாக அளவீடு செய்யப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட நிலங்களின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.300 கோடியாகும்.

முதலமைச்சர் தலைமையிலான இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் நேற்று (31.07.2024) வரை ரூ.6,446.93 கோடி மதிப்பீட்டிலான 6,746.97 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வின்போது திருக்கோயில் தக்கார் பா. தன்ராஜ், வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) குமரி ஆனந்தன், காவல் ஆய்வாளர் சண்முகவேல், வருவாய்த்துறை ஆய்வாளர் ரமேஷ், செயல் அலுவலர் இரா.ராஜகுரு, ஆய்வர்கள் மற்றும் நில அளவையர்கள் உடனிருந்தனர்.

### வயநாடு நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த

# திமுக வார்டு துணைச் செயலாளர் காளிதாசன் உடலுக்கு அஞ்சலி!

### மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் கழக நிர்வாகிகள் நேரில் செலுத்தினர்!

உதகை, ஆக. 1-

வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த, நெல்லியாளம் நகரம் 14வது வார்டு கழக துணை செயலாளர் காளிதாசனின் உடல் இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்டு மரப்பாலம் கொண்டு வரப்பட்டது.

நீலகிரி மாவட்ட திமுக சார்பில், நேற்று (31.7.2024) மாவட்ட திமுக செயலாளர் பா.மு.முபாரக் கழக நிர்வாகிகளுடன் நேரில் சென்று கழக கொடி போர்த்தி, மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, காளிதாசன் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

உடன் மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திராவிடமணி, காசிலிங்கம், நெல்லியாளம் நகர செயலாளர் சேகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் சிவானந்தராஜா, சுஜேஷ், தலைமை கழக சொற்பொழிவாளர் பாண்டியராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் சதக்கத்துல்லா, நகராட்சி தலைவர்கள் சிவகாமி, பரிமளா, கூடலூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் கீர்த்தனா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆலன், அன்வர்அப்துல்லா, இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் முரளிதரன் உட்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னணியினர் ஏராளமானவர்கள் இருந்தனர்.




